OFFICE OF THE REGISTRAR OF BO
6 - JUL 1954
MADRAS
.238.21193TK
N54



ஸ்ரீ அமுதகடேசுவரசுவாமி மூன்றுங்கோபுரம்

உ

சிவமயம்

# திருக்கடவூர்த் தலவரலாறு

இஃது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

25-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய

சுவாமிகள் அவர்களின்

திருவுள்ளத்தின்படி

திருக்கடவூர்

ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்

வெளியிடப்பெற்றது.

1954

முதற் பதிப்பு: 1943—பிரதிகள் 1000.
இரண்டாம் பதிப்பு: 1954—பிரதிகள் 2000.

3555

ஞானசம்பந்தம் பிரஸ்,
தருமபுரம்.

உ

குருபாதம்

# முகவுரை

**இந்தப்பதிப்பில்:-** புராண வரலாற்றுக் குறிப்புக்களும் கல்வெட்டுக் குறிப்புக்களும் மிக விரிவாகத் தரப்பெற்றுள்ளன. செய்யுட்களைப் பொருளுணர்ந்து சொல்லுதல்போலத் தலங்களை வரலாற்று நுணுக்கங்களோடு அறிந்து வழிபடுவதில் சிறப்பு இருக்கின்றது. அதனால் இறைவன்பால் கனிவுள்ளம் காட்ட முடிகிறது. அதற்குத் துணையாக இந்நூலை ஏற்றுப் படித்துப் பயன் பெற்று உய்வார்களாக.

சிறப்பாக மக்கள் தரிசிக்கவேண்டிய திருக்கோயிற் பகுதிகளும், திருவுருவங்களும் படமெடுத்து இதில் சேர்க்கப்பெற்றுள்ளன. இதில் எட்டுக்கு மேற்பட்ட படங்களைப் புகைப்படமெடுத்துத் தந்தவர் மாயூரம் திரு. ராமகிருஷ்ணன் அவர்கள்.

திருக்கடவூர்
தேவஸ்தானம்,
5—4—54.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச்
சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர
சுவாமி தேவஸ்தானம் டிரஸ்டி ஸ்தானிகம்.

**சுவாமிநாதத் தம்பிரான்,**

# பொருளடக்கம்


| | | பக்க எண் |
|---|---|---|
| 1. | தலமும் இருப்பிடமும் ... | 1 |
| 2. | தலப் பெயர்கள் ... | ,, |
| 3. | கோயிலமைப்பு ... | 3 |
| 4. | மூர்த்திகள் ... | 4 |
| 5. | தலப்பெருமை ... | 7 |
| 6. | புராணவரலாறு ... | 8 |
| 7. | தீர்த்தங்கள் ... | 17 |
| 8. | தலவிருட்சம் ... | 18 |
| 9. | வழிபட்டோர்கள் ... | 19 |
| 10. | சுற்றுக் கோயில்கள் ... | ,, |
| 11. | மண்டபங்கள் ... | ,, |
| 12. | சிற்பங்கள் ... | 20 |
| 13. | திருவிழாக்களும், நித்தியபூஜைகளும் ... | ,, |
| 14. | சொத்துக்கள் ... | 21 |
| 15. | திருப்பணி ... | 22 |
| 16. | சமயப்பணி ... | 23 |
| 17. | நிர்வாகம் ... | 24 |
| 18. | கல்வெட்டுக்கள் ... | ,, |
| 19. | திருப்பாடல்கள் ... | 36 |

உ

திருச்சிற்றம்பலம்

# திருக்கடவூர்த் தலவரலாறு

## 1. தலமும் இருப்பிடமும்

பூவிரிபொழில்சூழ் காவிரி நாட்டில் பொன்னி நதியின் தென்பால் விளங்கும் சிவதலங்களுள் திருக்கடவூர் என்பதும் ஒன்று. இது தஞ்சை ஜில்லா மாயூரம் தாலூகாவில் உள்ளது. மாயூரமிருந்து தரங்கம்பாடி செல்லும் இருப்புப்பாதையில் ஒரு புகைவண்டி நிலையமாக அமைந்திருக்கிறது. சோலைகளும், தடாகங்களும் நகரை அலங்கரிப்பதோடு மக்களுக்கு வேண்டிய பற்பல வசதிகளும் அமையப்பெற்று விளங்குகிறது. மாயூரமிருந்து கற்சாலையும் செல்கிறது.

## 2. தலப்பெயர்கள்

இத்தலத்திற்கு **வில்வவனம்**, **பிஞ்சிலவனம்**, **கடவூர்** என்ற பெயர்கள் கூறப்படுகின்றன.

**வில்வவனம்:—** ஞானோபதேசம்பெற விரும்பி பிரமதேவன் இறைவனை வழிபட்டான். அப்போது இறைவன் வில்வ விதையினைப் பிரமன் கையிலீந்து "இது இட்ட ஒரு முகூர்த்தத்துள் எந்த இடத்தில்

முளைக்கின்றதோ அந்த இடத்தில் தங்கி எம்மை வழி படுவாய்'' என்று கட்டளையிட்டனன், அவ்வாறே பிரமன் பல இடங்களில் இட்டுப்பார்த்து இறுதியாக இத்தலத்திலிட அது குறித்த காலத்திற்குள் முளைத்தது. பிரமனும் அது கண்டு மகிழ்ந்து இங்குத் தங்கி இறைவனைப் பூசித்து ஞானோபதேசம் பெற்றான். அது முதலாக தலத்திற்கு வில்வவனம் என்றும், மூர்த்திக்கு வில்வவனேசுவரர் என்றும் திருநாமம் வழங்கி வரலாயின.

**பிஞ்சிலவனம்** :— இத்தலத்திற்குத் தலவிருக்ஷம் பிஞ்சிலம் (சாதிமல்லிகைக்கொடி). ஆகையால் பிஞ்சில வனம் என வழங்கி வருகின்றது.

**கடவூர்** :— தேவரும் அசுரரும்கூடி அமுதம் வேண்டிக் கடல் கடைய, உண்டாகிய அவ்வமுதத்தினைக் கடத்திலடைத்துத் தவசித்திபுரமாகிய இவ்வில்வ வனத்திடை வைத்துவிட்டு நீராடச்சென்று திரும்பி வந்து தேவர்கள் கடத்தினை எடுக்க முயன்றனர். அது பாதலம்வரை யூடுருவிய சுயம்புமூர்த்த (சிவலிங்கவுருவ) மாக இருக்கக்கண்டனர். கடத்தில் உள்ள அமுதமே சிவலிங்க வடிவமாகக் கண்டமையால் **அமுதலிங்கம்** என்றும் **கடவூர்** என்றும், இறைவனுக்கும் ஊருக்கும் பெயராயின.

திருக்கடவூர் என்பது, இக்காலத்தில் திருக்கடையூர் என மருவி வழங்குகின்றது.



பிஞ்சலம் என்கிற ஜாதிமுல்லை. தலவிருட்சம்.



நூற்றுக்கால்மண்டபம். காலசம்மாரவிழாவில் காலசம்மாரமூர்த்தி திருவோலக்கம்கொள்ளும் இடம்.

## 3. கோயிலமைப்பு

ஆலயம் நகரின் நடுவே மேற்கு நோக்கிய சந்நிதானத்துடன் மிக அழகாக விளங்குகிறது. திருவீதியை உள்ளிட்ட பஞ்சப் பிராகாரங்கள் அமைந்து சிறப்பைத் தருகின்றன. அம்மையார் சந்நிதானம் கிழக்கு நோக்கியது. மேற்புறமும் கீழ்ப்புறமும் ஆலயத்திற்கு இராஜ கோபுர வாயில்களிருக்கின்றன, ஆலயத்தினுள்ளே முதற் பிராகாரத்தில் இடதுபுறம் **நூற்றுக்கால் மண்டபம்** என்னும் பிரசங்க மண்டபம் இருக்கின்றது. அதன் கீழ்ப்பால் நந்தவனம் விளங்குகிறது. முனீசுவரர் தங்கியிருப்பதால் **முனீசுவரர் கோபுரம்** எனவும் வழங்கப்படுகிற கீழக் கோபுரத்தினருகில் திருக்குளமும் உள்ளது. அப் பிராகாரத்திலேயே தென் மேற்கு மூலையில் அம்மையாருக்குத் தனி ஆலயம் அமைந்திருக்கிறது. அதன் பக்கத்தில் பிச்சைக் கட்டளை ஆபீசும் இருக்கிறது.

இரண்டாம் பிராகாரத்தில் உள்நுழைந்ததும் இடதுபுறம் அலங்கார மண்டபமும், ஈசான திசையில் யாகசாலையும், தென்மேற்கில் தேவஸ்தான காரியாலயம், களஞ்சியம், வாகன அறை ஆகியவைகளும் இருக்கின்றன.

மூன்றும் பிராகாரத்தில் உள்நுழைந்ததும் திருமாளிகைப்பத்தி மண்டபங்கள் அழகு செய்கின்றன, மேற்புறம் முருகன், இலக்குமி, சோமாஸ்கந்தர், வடபுறம் நடராஜர்சபை, வில்வவனேசுவரர், பிக்ஷாடனர்,

பைரவர், கீழ்ப்புறம் பஞ்சபூதலிங்கங்கள், சூரியன், தென் புறம் அகஸ்தியர், சந்தண பூஷண அரசர், அவர் அமைச்சர், குங்கிலியம் விற்கவந்த வணிகர், சப்தமாதர், அருள்பெற்ற இயமன், அறுபத்துமூவர் ஆகிய மூர்த்தங்கள் விளங்குகின்றன. தென்கிழக்கு மூலையில்—மடைப்பள்ளி அமையப் பெற்றிருக்கிறது.

சுவாமி சந்நிதியில் **சங்குமண்டபம்** இருக்கிறது. அதன் தென்மேற்கில் தல விநாயகரும், வடமேற்கில் சந்திரசேகரர், சமயாசாரியர் உத்ஸவ மூர்த்தங்களும் விளங்குகின்றன. மகா மண்டபத்தில் காலசங்காரக் கடவுளும், சுவாமிகோயிலின் வடபால் புண்ணியவர்த்தனரும், கீழ்ப்பால் சண்டேசரும், தென்பால் தக்ஷிணா மூர்த்தியும், கங்கையுடன் வந்த முல்லைக்கொடியும் விளங்குகின்றன.

## 4. மூர்த்திகள்

**கள்ளவாரணப் பிள்ளையார்:—** அமிருதலிங்கத்தினைப் பூசித்த பிரமன் விட்டுணு இந்திரன் முதலிய தேவர்கள் வேண்டுகோட்கு இணங்கிய சிவபிரான் "தேவர்களே! ஞானமிருதத்தினை இங்குள்ள ஞான வாவியிற் றந்தருளினேம் நீவிர் அருந்துமின்" எனத் தேவர்கள் சென்று தேடித்திகைத்துக் காணாது வருந்துகையில் மீண்டுஞ் சிவபிரான் காட்சிதந்து, 'பிரமன் இட்டசித்தியினைப் பெறுதற்கு, கணபதி முருகனுடன் ஒருசேரப் பண்டு எம்மைப் பூசித்தனன்; ஆதலின் கணபதியினை வணங்குங்கள். அஃது இணங்கி வரும்' என்றனர். உடனே தேவர்கள் அனைவரும் உள்ளத்திற்



1008 சங்கபூஜை



ஸ்ரீ அமுதகடேசுவரஸ்வாமி இரண்டாவது கோபுரம்

கரந்த கள்ளக் கணபதியாய ஓங்காரத் தொருவனை வழிபட்டனர். விநாயகரும் காட்சிதந்து "எம்மை மறந்ததால் யாம் மறைந்தோம்; ஆகையால் ஆண்டவன் அருளிய அமுதம் அடைந்தும் அடையாதவர்கள் ஆயினீர்! கவலற்க; யாம் தோன்றியவாறே அமுதமும் அவ்வாவியிடைத் தோன்றும் அருந்துதிர்" என்றனர். மீளவும் தேவர்கள் "தேவரீர் **சோரகணபதி** யென்னுந் திருப்பெயருடன் அன்பர்கள்முன் மறையாது இவ்விடத்தில் என்றும் எழுந்தருளி இட்டசித்திகளைத் தட்டாமல் தந்தருளல் வேண்டும். தாங்கள் அருளிய அமுதப் பெருக்கினைத் தங்கள் திருமுன் வைத்தருந்த விரும்பியுள்ளோம். அங்கும் எழுந்தருளல்வேண்டும்" என, ஆண்டவன் "விரும்பியதை விரும்பியாங்கே அருளினேம்; சென்று புசியுங்கள்" என்றனர். பின்னர்த் தேவர்கள் ஸ்ரீ கள்ளவாரணத்தினை யுன்னி வணங்கி ஞான வாவியின் மேற்பால் பிரதிட்டை புரிந்து துதித்துப் போற்றினர். அக்கணபதி யருளால் அமுதம்வர அருந்தினர்.

**அமிர்தகடேசுவரர்:—** இது இறைவர் திருநாமம். இஃதன்றி அமுதகடோற்பவர், 'அமுதகடேசர், காலசங்காரர், கடவூர் வீரட்டேசுவரர் எனப்பல திருநாமங்களும் உள. இப்பெருமான் திருமேனியில் ஒரு பிளப்பும், பாசத்தழும்பும் காணப்படுகின்றன. அவை மார்க்கண்டர் வரலாற்றினை நினைப்பூட்டுவனவாம்.

**அபிராமியம்மையார்:—** இது இறைவி திருநாமம். வலது மேல் திருக்கரத்தில் செபமாலையும்,

இடது மேல் திருக்கரத்தில் செந்தாமரை மலரும், வலது கீழ்க் கரத்தில் அபயமும், இடது கீழ்க் கரத்தில் வரத முமாகக்கொண்டு விளங்குகின்ருர். பிரமன் ஆண்ட வனைப் பூசித்துப் பேறு பெற்றதுபோல் பிராமியாகிய சரசுவதி தேவியும் அபிராமியினைப் பூசித்து இங்கு அருள் பெற்ருள்.

**புண்ணிய வர்த்தனர்:—** புலத்தியர் மார்க்கண் டேயரைக் காணவந்தபோது அமிருதலிங்கேசனை யர்ச் சித்து ஒரு திருமேனியினைப் பிரதிட்டை பண்ணினர். பூசித்தவர்கள் புண்ணிய விருத்தி யடைவர் என்பது பெயர்க் காரணமாகும்.

**பாபவிமோசனர் :—** அகத்தியரால் பூசிக்கப் பட்டது. இம்மூர்த்தி பூசித்தார் பாபத்தை விமோசனம் (விடுத்தல்) செய்தலின் இப்பெயர் பெற்றது.

**வில்வவனேசுவரர் :—** இம்மூர்த்தி சிவலிங்கா காரமாகும். ஆதிமூர்த்தி, பிரமனால் பூசிக்கப்பட்டது. உற்சவ பிக்ஷாடன மூர்த்தி சபைக்குக் கீழ்ப்பால் மேற்கு நோக்கிய சந்நிதியாகும்.

**திருஞானசம்பந்த சுவாமிகள்:—** இப்பெரு மான் (உற்சவர்) நடனக்கோலத்தில் காட்சி யருளு கின்ருர்.

**சுந்தரமூர்த்தி நாயனர்:—** இப்பெருமான் (உற்சவர்) பரவை நாச்சியாருடன் விளங்குகின்ருர்,



ஸ்ரீ காலசம்மாரமூர்த்தி

**காலசங்காரக் கடவுள்:—** மகாமண்டபத்தின் வடபால் சிற்ப வேலைப்பாட்டுடன் கூடிய அழகிய சபையில் இயமனை நிக்கிரகானுக்கிரகம் பண்ணின அவசரத்தில் (தோற்றநிலை) தெற்குமுகமாக எழுந்தருளி யுள்ளார். வலது திருக்கரங்களில் சூலமும், மழுவும், இடது திருக்கரங்களில் பாசமும், தர்சனி முத்திரையு மாகக் காணப்படுகின்றார். இடது திருவடியால் உதை யுண்ட இயமனார் தலை கீழாக விழ்ந்து கிடக்கின்றார். அவ்வியமனார் காலடியில் மார்க்கண்டேயர் இறைவனார் மேற்பக்கத்திலமர சிவபூதம் கயிறுகட்டி இழுக்கின்றது. இடது பக்கத்தில் வாலாம்பிகை திருமகள் கலைமகளாகிய சேடியருடன் விளங்குகின்றார். இம்மூர்த்திக்கெதிரில் வடக்குமுகமாக இயமனார் (உற்சவமூர்த்தி) எருமை யூர்தியுடன் ஆண்டவன் அருளைநாடிய வண்ணமாகக் காணப்படுகின்றார். இக்காலசங்கார மூர்த்திக்கு ஆண்டில் பதினொருமுறை அபிஷேகமாகும். இவர் சித்திரைத் திருநாளில் ஆறாந் திருநாளன்றுதான் வீதியுலாவிற்கு எழுந்தருளுவர்.

குங்கிலியக் கலயர் (உற்சவர்), முருகர், சந்திரசேகரர், மார்க்கண்டீசர், இரத்தின கைடேசுவரர் முதலிய திரு வுருவங்களும் இருக்கின்றன.

## 5. தலப்பெருமை

செயற்கருஞ் செயல்களருளிய சமயாசாரிய மூர்த்தி கள் மூவர் திருப்பதிகங்களும் உடையது. குங்கிலியக் கலயரும், காரிநாயனாரும் திருவவதாரம் புரிந்தருளி

சிவபெருமானுக்குரிய திருப்பணி புரிந்து முத்தி எய்திய சீர்மையுடையது. சிவத்தினைவிட வேறு தெய்வமில்லை யெனும் மறையினை செம்மையுற ஆய்ந்த மிருகண்டு புதல்வராய மார்க்கண்டேயர் அமிருதலிங்கத்தினை வழி பட்டுக் காலனைவென்ற சீலமுடையது. அபிராமியம்மை யின் திருவருள்பெற்ற அபிராமிபட்டர் அந்தாதியியற்றிச் செயற்கருஞ் செயல்புரிந்து விளங்கினர். அட்ட வீரட்டத் தலங்களுள் இத்தலமும் ஒன்ருகும். நவக்கிரகங்கள் இத்தலத்தில் இல்லை.

## 6. புராணவரலாறு

**மார்க்கண்டேயர்:—** மிருகண்டு முனிவரின் புதல்வர். தமக்கு வயது பதினறு என்பதைத் தாய் தந்தையர் கூறக்கேட்டுச் சிவபூசையினைத் தலங்கள் தோறுஞ் சென்று செய்துகொண்டு வந்து கடைசியாகக் கடவூர்ப் பெருமானைப் பூசித்துக் கொண்டிருந்தனர். அங்ஙனம் பூசித்துக் கொண்டிருக்கையில் ஆயுள் எல்லைவர காலனர் கணங்களுடன் எருமைக்கிடா வாகனத்தில் ஏறிவந்து மார்க்கண்டேயரை அவர் பூசிக் கும் பெருமானுடன் சேர்த்துப் பாசத்தைக் கட்டியிழுத் தனர். இறைவர் சிவலிங்கத்திடமாகக் காலசங்கார மூர்த்தியாய் எழுந்தருளி இயமனை உதைத்துத் தள்ளி மார்க்கண்டருக்குச் சிரஞ்சீவியாய் என்றும் பதினறு வயதுடையவராக இருக்க வரம் அருளினர்.

**குங்கிலியக்கலய நாயனர்:—** இந்நாயனர் இத்திருக்கடவூரில் மறையவர் குலத்துதித்தவர். இவர்



''காலனைக் காலாற் கடிந்த காலகாலப் பெருமான்''



ஸ்ரீ அபிராமியம்பாள் கோபுரம்

பிள்ளைத் திருநாமம் ஆண்டவன் பெயராகிய கலயர் என்பதேயாம். இவர் திருவீரட்டானப் பெருமானுக்கு நாடோறும் குங்கிலியப்புகை போட்டுவருவார். திருவருட் செயலால் இவருக்கு வறுமையுண்டாயிற்று. ஒருநாள் இவருடைய மனைவியார், வறுமையால் தம் மக்களும் சுற்றத்தினரும் வருந்துதலைக்கண்டு, தம்மிடம் எஞ்சி யிருந்த திருமங்கிலியத்தினை நாயனாரிடம் தந்து அரிசி முதலியன வாங்கிவர அனுப்பினர். நாயனார் தெருவில் போய்க்கொண்டிருக்கையில் எதிரில் வணிகன் ஒருவன் குங்கிலியப்பொதி கொண்டு வருதலைக்கண்டு மனமகிழ்ச்சி அடைந்தார். திருமங்கிலியத்தினைக் கொடுத்து அக் குங்கிலிய மூட்டையைப் பெற்றுத் திருக்கோயில் பண்டாரத்திலிருத்தித் தாமும் வீடுசேராமல் நறுந்தூப மிட்டுக்கொண்டே அவ்விடமிருந்தனர். வீரட்டானேசு வரர் குங்கிலியக் கலயனாயனாருடைய வீடு முழுதும் நெல்லும், பொன்னும், ஆடையும், ஆபரணமுமாகக் கிடக்கும்படி அருள்புரிந்து மனைவியார் கனவிடை எழுந் தருளி அநுக்கிரகம் செய்தருளினார். அவரும் விழித் தெழுந்து திருவருளை வியந்து கணவனார்க்கு அமுது சமைக்கத் தொடங்கினர். இறைவன் நாயனாரிடத்திலும் தோன்றி "அன்ப! நீ வீடுசென்று அமுது அருந்துக' என்றருளிச்செய்து மறைந்தனர். நாயனார் கட்டளையை மறுத்தற்கஞ்சி வீடுசென்று பொன் முதலியவற்றினைக் கண்டு மனைவியாரை வினவித் திருவருளின் பெருமை யினை வியந்து போற்றினர். இவ்வாறிருக்கும் நாட்களில் ஒருநாள் திருப்பனந்தாளில் சாய்ந்திருந்த சிவலிங்க மூர்த்தியை நிமிர்த்து வழிபாடாற்ற எண்ணி அரசன்

யானை முதலியவற்றைக் கட்டி யிழுத்தும் நிமிராதது கண்டு வருந்துதலை நாயனர் கேள்வியுற்ருர்.

அங்குச் சென்று தமது கழுத்திற் கயிறுபூட்டி அகக்கயிருகிய அன்புக்கயிற்ருல் இழுத்தனர். சிவலிங்கம் நிமிர்ந்தது. அவ்விடம் சிலநாள் இருந்து திருப்பணிகள் பல செய்து மகிழ்ந்தார். மீண்டும் திருக்கடவூர் வந்து, தூபப்பணி செய்து கொண்டிருந்தார். இவ்வாறிருக் கையில் தலயாத்திரை செய்துவரும் திருஞானசம்பந்த சுவாமிகளையும் திருநாவுக்கரசு சுவாமிகளையும் எதிர் கொண்டழைத்து உபசரித்து அமுது செய்வித்து அவர்க ளுடைய திருவருளையும் பெற்ருர். இவ்வாறு சிலகாலம் திருப்பணி செய்து கொண்டிருந்து இறைவன் திருவடி நீழலெய்தினர்.

**அபிராமிபட்டர்:** சோழவளநாட்டில், சரித்திரத் திலும், சாத்திரத்திலும், சமயநிலையிலும் விளக்கம் பெற்ற திருக்கடவூரிலே அந்தணர் மரபிலே அபிராமி பட்டர் அவதரித்தார். இவருடைய முன்ஞேர்கள் அபிராமி அமுதகடேசப் பெருமானிடத்து நீங்காத அன்பு பூண்டவர்கள். ஆதலால் இவருக்கும் அபிராமி பட்டர் என்றே பெயர் சூட்டினுர்கள். இவரும் தம் குல தெய்வமாகிய தேவியினிடத்து முறுகிய அன்புகொண்டு தியானயோகத்துத் திளைத்துவந்தார். பராகாசவெளியில் பராசத்தியைச் செவ்வொளியாகக் கண்டு சிவானந்தத் தேன் பருகித் தன்வசமற்றுத் தாய்வசமான சேயானுர்.

இங்ஙிலை, உலகியலில் ஊடாடும் ஊரினர்க்குத் தெரியுமா? பாம்பறியும் பாம்பின்கால், சிற்றம்பலப்

பித்தேறிய மணிவாசகனுரைப் பித்தனென்ற உலகந் தானே! ஆதலால் உடன் உறையும் அந்தணர்கள் பலரும் "சக்தியுபாசகர்; ஊனுங் கள்ளும் உண்டு திரியும் பித்தர்" என்றெல்லாம் வாய்க்கு வந்தவாறு சொல்லித் திரிந்தனர். இந்த ஏச்சும் பேச்சும் சிவானந்தப் பெருவாரிதியிலே திளைக்கும் அவர் காதிலே ஏறுமா? புலன்கடந்த பெருவெளியிலே பொருந்தியவருக்குப் புகழ் ஏது? எல்லாம் ஒன்றுதானே!

இவருடைய அறநிலைக் காட்சி, பார்க்குந் திசை தோறுந் திரிபுரையாள் திருமேனியைக் கண்டது, உமையும் உமையொருபாகருங் கூடிய உருவமாகக் கண்டது" இவ்வாறு அம்மையும் அப்பருமாகக் காணுங் காட்சி, சித்தாந்தச் செல்வராகிய அப்பர் ஐயாற்றிற் கண்ட காட்சியல்லவா? அக்காட்சியே இவர்க்கும் சித்திப்பதாயிற்று.

இவர் இவ்வாறு அம்மையின் அருள் வெள்ளத்து மூழ்கி வருங்காலத்து ஒரு நாள் தஞ்சையையாண்ட சரபோசி மன்னன் தையமாவாசைக்குக் கடலாடக் காவிரிப்பூம்பட்டினம் வந்தான். கடவூர் நாதரைத் தரிசிக்க எண்ணித் திருக்கோயிலிற் புகுந்தான். அம்மையின் சந்நிதியில், சின்னஞ்சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும், பென்னம்பெரிய முலையும், முத்தாரமும், பிச்சிமொய்த்த கன்னங்கரிய குழலும், கண் மூன்றும் கருத்தில் வைத்துத் தன்னந்தனியிருந்து 'நினைவின்றி யாண்டுகொண்ட எளிவந்த கருணைக்கு வியந்து, ஆனந்தத் தேன் அருந்தி, அறிவு மயங்கியிருந்தார். அம்மையின்

அருளொளி அவர் மேனிமுழுதும் வீசிக்கொண்டிருந்தது. வீறுகொண்ட மன்னன் மனமும் கனிந்து, கரைந்து, இத்தகைய பெரியாரோடு அளவளாவ வேண்டும். இவர் உரைகள் யாவும் உய்திகாட்டும் மந்திரங்களல்லவா! என்று எண்ணினன். அருகில் இருந்த அந்தணர்களை நோக்கி, வேந்தனையும் துரும்பாக எண்ணி வீற்றிருக்கும் இவ்வீரக்தர் யார்? என்று வினவினன். அற்றம்பார்த் திருந்த அந்தணர்கள் "வாமமார்க்கத்தவர்; மதுமயக்கால் மயங்கி இருக்கின்றார்" என்றனர். மன்னன் இதனை நம்பாது அவர் முகஒளி அகத்தைப் பிணிக்க ஏதாவது பேச்சுப் பெறுதல்வேண்டும் என்ற விருப்பால், 'ஐயா! இன்று என்ன திதி? எவ்வளவு நாழிகை இருக்கிறது' என்று கேட்டான். அபிராமி தேவியின் மதிமுகத்தை மனத்தில் கண்டு, ஒளியில் ஆனந்திக்கின்ற பட்டருடைய காதில் அது அரைகுறையாகப்பட்டது. பட்டர்மனத் தைப் பரத்திலே வைத்து இன்று சுத்த பூர்ணிமை யாயிற்றே என்றார். ஒளிகண்ட அவர் மனம் பூர்ணிமை யையும், இருள்கண்ட அரசர் மனம் இருளையுமே கண்டிருப்பன ஆதலால் தேவியின் முகச்சந்திரனைக்கண்டு கூறிய அவர் வார்த்தையை அவன்கண்டானா? அப்படியா அந்தணர்கள் சொன்னது உண்மைதான் என்று எண்ணிச் சென்றான்.

அரசன் செல்கின்ற பவனி ஆரவாரத்தால் பட்டர் மனம் திரிபுரையோக நிலையிலிருந்து சிறிது பிரிந்தது. சிந்தனை, உலகியலை நோக்கிற்று. உண்மை உணர்ந்தது. என்ன சொல்லிவிட்டோம் என்ற இரக்கம் எழுந்தது.

அப்போது அரசன் 'பட்டரே' மயக்கமா? இன்று பூர்ணிமை இல்லையாயின், அரசன் ஆணை உம்மை நன்னெறிப்படுத்த வருத்தும் அறிக! என்று சினந்து சென்றான். பட்டர் இனி என்செய்வது? 'எல்லாம் அவள் செயல்' என்று எண்ணி "உதிக்கின்ற" என்று தொடங்கி அம்மையைத் தோத்தரிக்க ஆரம்பித்தார். அம்மையோ செந்தமிழ் வழிந்தொழுகும் திருச்செவியள். ஆதலால் தமிழ் விருப்பு கருணையைத் தாமதிக்கச் செய்தது. பாட்டும் 78 ஆயிற்று. காலமும் மாலையாயிற்று. உலகம் இருண்டு வருகிறது. பரபரந்த பட்டர் மனத்தில் தெளி நின்ற ஞானத்திரு பிறந்தது. அதனால் எழுந்த 79-ம் பாடல் "விழிக்கே அருளுண்டு" என்பது. இப்பாடல் கேட்ட தேவி தனது தோட்டினைக் கழற்றி வானமண்டலத்து வீசி, நிலவொளி உண்டாக்கி, யோகநித்திரையில் இருக்கும் பட்டரை எழுப்பி, "பார்; சுத்த பூர்ணிமையை" என்றாள். பட்டர்கண்டு அம்மையின் கருணைத் திறத்தை வியந்துநின்றார். அம்மை "அன்பனே! குறையையும் நிறைவித்து முதலும் கடையும் கூட்டி முடித்து இப் பாமலையை எமக்குச் சூட்டுக" என்று ஆணை தந்தனர், பட்டர், ஆணைவழி நின்று இதனைப் பாடி முடித்தனர்.

அரசன், மதியொளிகண்டு, அடியார் பெருமை அறியாத தம்மதியிருள் நீங்கிப் பட்டரை அவமதித்த தம் மதியீனத்திற்கு வருந்தி, ஓடிவந்து திருவடிகளில் வீழ்ந்து வணங்கி மன்னிப்பு வேண்டினான். காணிக்கையாகக் காணி கைக்கொள்ள வேண்டினான். பொருள் விருப்பற்ற பட்டர், செம்பொருள் விரும்பிய பட்டர்

"நிலம் புலத்தை அழிக்கும்; பொருள் மருளை அளிக்கும் வேண்டாம்" என்று மறுத்தார். அரசன் தங்கள் சந்ததிக் காவது ஏதாவது ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று குறையிரந்தான். பட்டர் விருப்பப்படி வேலிக்குக் குறுணி களமான்யமாகச் சூரிய சந்திரன் உள்ளவரை எல்லாம் கொடுத்துவர ஆணை தந்து, தஞ்சைசென்ருன். இதற்குரிய உரிமைச் செப்புப்பட்டயம் ஒன்று பட்டர் சந்ததியாரிடம் இன்றும் இருக்கிறது.

இவர் செய்த வேறு நூல்கள்:—

திருக்கடவூர்த் தல விநாயகரான கள்ள வாரணப் பிள்ளையார் பதிகம், அபிராமி பதிகம், அமுதகடேசர் பதிகம் ஆகிய இவைகளும் இவரியற்றியனவே. அன்றியும், இவர் சந்ததியார்கள் **காலசம்மாரப் பின் முடுகு வெண்பா** என்ற நூலையும் இவர் இயற்றியதாகக் கூறுகிருர்கள். இரண்டொரு பாடலும் சொல்லுகின்ருர்கள். அவற்றை ஆராய்ந்தபோது தருமபுர ஆதீன வித்துவானுக விளங்கிய இராதாநல்லூர்ச் சைவ எல்லப்ப நாவலர் ஏட்டுப் பிரதி ஒன்றன் இறுதியில் "அபிராமி பட்டர் செய்தருளிய காலசம்மாரப் பின் முடுகு வெண்பா முடிந்தது" என்ற குறிப்புக் காணப்பெற்றது. ஆனுல் அந்த ஏடு அபூர்த்தியாகவும் உதிர்ந்த பல ஏடுகளைக் கோத்ததாகவும் இருந்தது. அதிலிருந்து ஒன்பது பாடல்களே கிடைத்தன. ஆனுல் அந்நூல் 30 பாடல்களை யுடையதென்று தெரிகிறது. இப்பாடல்கள் ஒன்பதும் தனிப் பாடற்றிரட்டில் பல புலவர்கள் பாடிய பகுதியில் பெயரறியா வரிசையில் சேர்க்கப்பெற்றுள்ளன. அவை



எருமைக்கடாவின்மேல் எமதர்மராஜா

களும் பழம் பாடற் பாதுகாப்புக்காக இங்குத் தரப்படு கின்றன. அவை வருமாறு:—

அன்றயன்மால் காண அடிமுடியைக் காண்பதற்குத்
தென்றிசைக்கோ னென்னதவஞ் செய்தானே?—வென்றிதிகழ்
ஆடரவாளா நீறணிதோளா ஆதிரைநாளா மாதுமணாளா
தோடவிர்காதா மாகடவூரா சொல்.

தென்ற லுலவுந் திருக்கடவூ ரெம்பெருமான்
மன்றல் செறிந்தே மதுவூறும்—கொன்றைக்காப்
பொன்பரவுந்திண் கொங்கையிரண்டும் புண்படநொந்தும்
அன்புதிரண்டு பெண்கொடிநெஞ் சஞ்சும். [துன்பமிகுந்தும்

பாலனுக் காவன்று பகடேறி வந்தெதிர்த்த
காலனுக்குக் காலா கடவூரா—மேலோர்
கரும்புகொண்டங் கெதிர்த்துவந்தங் கசன்பொருஞ்
மருண்டுநெஞ்சங்கலங்குமென றன்மான். [செஞ்சரங்கள்கண்டு

தொண்ட ருடன்கூடித் துதித்திரண்டு கண்ணாரக்
கண்டு தொழுவேனே கடவூரா—பண்டோர்
அமுதிருக்குஞ் சிறுகடத்தன் றெழுமுனக்கன் பரைமருட்டும்
அமனையெற்றும் பரிபுரச்செந்தாள்.

என்று தொழுவேன் எளியே னளிமுரலும்
கொன்றையணி தென்கடவூர்க் கோமானே—துன்றும்
கனற்பொறிக்கட் பகட்டிலுற்றுக் கறுத்தெதெற்குத்
தனைச்சினத்திட் டுதைத்தபத்மத் தாள். [திசைக்குளுரத்

பற்றிப் பணிந்து பரவ வரந்தருவாய்
கற்றைச் சடையா கடவூரா—வெற்றிநெடுங்
கொண்டலொக்குங் கண்டசத்தங் கொண்டெதிர்த்தங்
சண்டனைக்கண் டன்றுதைக்குந் தாள். [கங்கருக்கும்

ஆற்றுமோ நெஞ்சத் தடங்குமோ கொண்டமையல்
கூற்றுதைத்த தென்கடலூர்க் கோமானே—மாற்றுயர்பொற்
கும்பமுலைத் திங்கணுதற் கொந்தளகக் கொம்பைவெறுத்
தம்புதொடுத் தங்கசன்விட்டால்.

சுடுமோ விளந்தென்றல் தோகையின்மே லம்பு
படுமோமெய் வாதைப் படுமோ—கடலூரா
நீரணங்கார் வேணிநம்பா நீலகண்டா மேனியின்பால்
ஆரணங்கார் காலசங்கா ரா.

மேகங் கவிந்ததுபோல் மேலெழுந்த காலனைக்கண்
டாகந் தளர்ந்துநெஞ்ச மஞ்சாமுன்—மாகடலூர்ப்
பூதநாதா வேதகீதா பூவிதாதா தேடுபாதா
மாதுபாகா காலகாலா வா.

***காரிநாயனார்:***— திருக்கடவூரில் அவதரித்தவர். சொல்விளங்கிப் பொருள் மறைந்து கிடக்கும்படி தம் பெயரினால் கோவைபாடி, மூவேந்தரிடமுஞ் சென்று, அவர்கள் மகிழும்படி பொருள் விரித்துரைத்து, அவர்களிடம் மிகுந்த பொருள்களைப் பெற்றுச் சிவாலயங்கள் கட்டுவித்தும், சிவனடியார்களுக்கு வேண்டும் பொருள்கள் அளித்தும் முத்தி எய்தினர்.

***திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனார்:*** திருவியலூர் உய்யவந்ததேவநாயனார்க்குச் சீடர் திருவியலூர் ஆளுடைய தேவநாயனார். அவர்க்குச் சீடர் திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனார். திருவியலூர் உய்யவந்ததேவநாயனார் வடநாட்டிலிருந்து தென்னாட்டுத் தலயாத்திரைக்கு வந்து திருவியலூரில் தங்கியகாலத்தில் அவ்வூர் ஆளுடையதேவநாயனார்க்கு இத் திருவுந்தி



ஸ்ரீ அசுவதி தீர்த்தம்: மார்க்கண்டேயர் கொணர்ந்த கங்கை



ஸ்ரீ அமுதபுஷ்கரிணியும் ஸ்ரீ அமுதவிநாயகர் ஆலயமும்

யாரென்னும் ஞானநூலைச் செய்தருளினார் என்பது பழஞ்செய்தி. அவர் வடநாட்டவர் ஆயின், தமிழில்உள்ள பெயர் பின்வந்தது எனல் வேண்டும். அவரது இயற் பெயர் முதலியன தெரியவில்லை. 'உய்யவந்த' என்றது பற்றிப் புனைந்ததுமாம், திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனார் தாம் அருளிச்செய்த ஞானநூலை தில்லை வாழந்தணர்கள், மருமல் ஏற்கத், தில்லைமன்றத்துத் திரு வைந்தெழுத்துப் படியின் கீழ்வைத்தலும், அதிலிருந்த யானைவடிவம் உயிர்த்துத் தன்கையால் எடுத்து. மன்றுடி மலர்த்தாட்கீழ் வைத்தது. அதனால் திருக் களிற்றுப் படியார் என்ற சிறப்புற்றது. காலம் 1100 (கி. பி. 1177) இரண்டு நூல்கட்கும் உள்ள ஒற்றுமை களையும் வழிநூலின் 96-ம் பாட்டையும் நோக்கி உண்மை உணர்க. இவற்றிற்குப் பலவுரைகள் உள. மெய்கண்ட நூலினுள் இவ்விரண்டும் முதலிடம் பெற்ற சிறப்பை நோக்குக.

## 7. தீர்த்தங்கள்

**1. அமிருதபுட்கரணி:-** இத்திருக்குளம் கீழை இராஜ கோபுரத்திற்கும் இரண்டாஞ் சுற்றுலைக்கும் இடையிலுள்ளது. மூழ்கினோர் பவப்பிணி மாய்த்துப் பெருநிலையுறுவார். இக்குளத்தின் மேல் கரையின்கண் அமிருதசித்தி விநாயகர் ஆலயமுள்ளது. இவ்வாவியி னின்றும் தேவர்கட்கு அமிருதம் அளிக்கப்பெற்றது.

**2. காலதீர்த்தம்:-** இஃது ஆனைக்குளமாகும். இவ்வூரினுக்குப் பேரணியாயிலகுவது. இயமனால் உண்டு

பண்ணப்பட்டது. இதன் தென்கரையில் காலனுற் பூசிக்கப்பட்ட காலேசுரராலயம் இருக்கிறது. இத்தீர்த் தத்தில் மூழ்கிப் பூசித்து வழிபடுவார்க்குப் பேரருள் புரிய வேண்டுமென வரம்பெற்றனர் இயமனுர்.

3. **மார்க்கண்டேய தீர்த்தம்:—** இது கடவூர் மயானத்தின்கண் கூபவடிவமாக வுள்ளது. மார்க் கண்டர் வேண்டுகோட்படி கங்காதீர்த்தம் இக்கூபத்தில் தோன்றியது. அமிருதலிங்கேசருக் கன்றி ஏனைய கடவு ளருக்கு இத்தீர்த்தம் அபிஷேகத்திற்கு எடுக்கப்படுவ தில்லை சங்காபிடேகத்திற்கும், இத்தீர்த்தமே எடுத்துச் செல்லப்படுகிறது. பங்குனி சுக்கில பட்ச அசுவினியில் சுவாமி தீர்த்தங் கொடுத்தருளுவார். அன்றுதான் எல்லோரும் அத்தீர்த்தத்தில் மூழ்குவார்கள்.

காவிரிதீர்த்தம், அம்மனுறு முதலிய பல தீர்த்தங் களும் உள.

## 8. தலவிருட்சம்

1. **வில்வம்:—** இது 'சிவ வடிவமேயாகும். இரண்டாம் பிராகாரத்திலிருக்கிறது.

2. **சாதி மல்லிகைக்கொடி:—** மார்க்கண்டேயர் அமிருதலிங்கப் பெருமானை அபிடேகித்துப் பூசிப்பதற் காகக் கங்கையினை வரவழைக்கையில் சடைக் கங்கை யாகிய அங்கங்கையுடன் வந்தது. தக்ஷிணமூர்த்தி சந்நிதியில் மேடைகட்டிப் போற்றப்பட்டு வருவதோடு பூசையும் நடைபெற்று வருகின்றது.



சங்கு பூஜை நடக்கும் முன்மண்டபம்

## 9. வழிபட்டோர்கள்

மார்க்கண்டேயர், குங்கிலியக்கலயர், காரிநாயனர், சப்தகன்னிகள், நவதுர்க்கை, சிபி, பிரமன், வாசுகி, சோமசருமன், சிவசருமன், ஏமகிரீடன், இரத்தின கைடன், சந்திரபூடணன், பிரமாதிராஜன், இரத்னகரன், பஞ்சசூரியர்கள் எனும் பலர் இத்தலத்திறைவனை வழி பட்டு முத்தியின்பம் பெற்றார்கள்.

## 10. சுற்றுக்கோயில்கள்

ஆனைக்குளத்தின் தென்கரையில் காலேசுவரர் ஆலயம் உள்ளது. வீதிகளில் ஆங்காங்கு விநாயகர் ஆலயங்களும், பிடாரிகோயில், ஐயனர்கோயில், கன்னிக் கோயில் முதலிய ஆலயங்களும் இருக்கின்றன.

ஒட்டங்காடு மாரியம்மன்கோயில் ஒரு பிரபல காணிக்கை க்ஷேத்திரம். அங்கு பங்குனி மாதத்தில் சிறப்பான உற்சவம் நடைபெறுகிறது.

## 11. மண்டபங்கள்

நூற்றுக்கால் மண்டபம், அலங்கார மண்டபம் எனப்படும் எழுத்து மண்டபம், சங்கு மண்டபம் முதலிய மண்டபங்கள் இருக்கின்றன. நூற்றுக்கால் மண்டபமே பிரசாரசபா மண்டபமாகத் திகழ்கின்றது.

## 12. சிற்பங்கள்

கோபுரங்களிலும், பிறவிடங்களிலும் பழையகால ஓவியங்கள் தீட்டப்பெற்றிருக்கின்றன. அவைகள் யாவும் பழங்கால நாகரீகத்தினை நமக்கு அறிவுறுத்து வனவாகக் காணப்படுகின்றன.

## 13. திருவிழாக்களும், நித்தியபூசைகளும்

நாடொறும் காரணகாமிக ஆகமப்படி ஆறுகால பூசைகள் நடைபெறுகின்றன. சித்திரைமாதத்தில் பிர்மோற்சவம் நடைபெறுகிறது. அதில் ஆறுந் திருநாளன்று காலசம்ஹாரம் நடைபெறும். பங்குனி மாதத்தில் காசிக் கங்கையை மார்க்கண்டேயர் வர வழைத்து இறைவனுக்கு அபிஷேகித்த ஐதிகத்தைஒட்டி மார்க்கண்டேயர் திருமெய்ஞ்ஞானத்திற்கு எழுந்தருளித் தீர்த்தங் கொடுத்தருளுவர். மற்றும் நவராத்திரிவிழா, ஆடிப்பூர விழா முதலிய திருவிழாக்களும் நடைபெறு கின்றன.

**கார்த்திகை சோமவாரச் சங்காபிடேகச் சிறப்பு:-** எம்மாதங்களிலுஞ் சிறந்தது கார்த்திகையாகும். எவ் வாரத்திலுஞ் சிறந்தது சோமவாரமாகும். அபிடேகப் பிரியர் எனச் சிவபெருமானுக்குத் திருநாமமுண்டு. அபிடேக மெவற்றினும் சிறந்தது மகாபிடேகம். மகாபிடேகத்தினுஞ் சிறந்தது சங்காபிடேகமாகும். சங்கு வலம் புரியும், இடம் புரியுமாகும். சலஞ்சலம், பாஞ்சசன்னிய சங்கங்களும் உள. இத்தலத்தில் வலம்புரி இடம்புரிச் சங்குகளைப் பரப்பி மார்க்கண் டேயர் கங்காதீர்த்தத்தைப் பெய்து விதிமுறைப்படி



ஸ்ரீ சக்ரதாடங்கம்



1953-ல் புதிதாகச்செய்யப்பெற்ற
வெள்ளிமஞ்சம்

பூசனை புரிந்து அச்சங்கினை அமுதகடேசுவரருக்கு அபிடேகிப்பார். பிரகதீசமகாராஜா தாம் பவப்பிணி நீக்கத்தின் பொருட்டு இச்சங்காபிடேகத்தினை உவப்புடன் செய்வித்தனர். இச் சங்காபிடேகத் தீர்த்தத்தினை வாங்கி யருந்தினும் சங்காபிடேகத்தினைக் காணினும் எல்லாநோயும் நீங்கப் பெறும்.

## 14. சொத்துக்கள்

இத் தேவஸ்தானத்திற்கு நன்செயில் சுமார் 1622 ஏக்கரும், புன்செயில் சுமார் 1022 ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அன்றியும் 61 வீடுகளும், கடைகளும் உள்ளன. நிலங்களுள் சில பிரஞ்சிலாக்காவிலும் இருக்கின்றன.

சுவாமிக்குக் குவளையும், அம்மையாருக்கும் சம்ஹார மூர்த்திக்கும் நிலையங்கியும், இடபவாகனம், யானை வாகனங்களும் இருக்கின்றன. அம்பிகைக்கு ஸ்ரீசக்ர தாடங்கம் ஒன்றும் அண்மையில் அமைக்கப் பெற்றிருக்கிறது.

சுவாமிக்கு வெள்ளிக்கவசமும், அம்மையாருக்கு வெள்ளிக்கவசமும் முன்னரே செய்யப்பெற்றிருந்தது. ஸ்ரீ காலசம்ஹார மூர்த்திக்கு வெள்ளிக்கவசம் புதிதாகச் செய்யப்பெற்றுள்ளது. ஸ்ரீ கள்ளவாரணப் பிள்ளையாருக்கும், ஆடிப்பூர அம்மனுக்கும் வெள்ளிக் கவசங்கள் செய்யப்பெற்றுள்ளன. ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தி எழுந்தருளியிருக்கும் மஞ்சம் முழுதும் வெள்ளிக் கவசமிடப் பெற்றிருக்கிறது. ஸ்ரீகாலசம்ஹாரமூர்த்தி, ஸ்ரீஅம்பாள் திருவாட்சி புதிதாக செய்து தங்கமுலாம் பூசப்பட்டது.

## 15. திருப்பணி

வருஷாவருஷம் செய்துவரும் திருப்பணி வேலைகளுடன் இந்தக் கோயிலில் அமிர்தபுஷ்கரணி தீர்த்தம் தண்ணீர் இரைத்து சுத்தம்செய்து, கைப்பிடிச்சுவர், படிக்கட்டுகள் கட்டப்பட்டும் தீர்த்த விநாயகர், ஸ்ரீ அம்பாள் கோவில் கோபுரம் சுதை உதிர்ந்துபோயிருந்ததை திரும்பவும் சுதைபோட்டு வர்ணம் வைத்தும், தெற்குப் பிரகாரம், திருமதில் விழுந்தபாகம், நந்தவனம் சுவர்கள் ரிப்பேர்செய்து சிமிண்டு பூச்சுசெய்தும், அம்பாள்கோவில் உற்சவமண்டபம் சுவாமிகோவில் உற்சவமண்டபம் தெற்குத் திருமாளப்பத்தி முதலிய இடங்களும் தேர் முட்டி, நந்தவனம் Engine shed முதலிய இடங்களும் வேலை செய்யப்பட்டிருக்கிறது. சுவாமி கோயில் கொடிமரம், அம்பாள்கோயில் கொடிமரம் புதிதாகப் போடப்பட்டிருக்கிறது. இராஜகோபுரம், அம்பாள் விமானம், பிராகாரம் தளவரிசை, திருப்பணி செய்துவருகிறது.

மேலும் சங்குமண்டபம், உட்பிரகாரம் தளவரிசை சுவாமிகோவில் விமானம் முதலிய இடங்களும் வேலை செய்யவும் யாத்ரீகர்கள் வந்து தங்கக் கட்டிடம் கட்டவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

இந்தத் தேவஸ்தானத்தில் பழய தேர் ரிப்பேர் ஏற்பட்டு ஓடுவதற்கு ஒற்றுமையில்லாமல் இருந்தது. புதிய தேர்செய்து அதற்குள்ள தேர்ச் சீலைகள் வடம் வகையரு புதிதாகச் செய்து இப்பொழுது உற்சவத்தில் தேர் ஓட்டம் விமரிசையாக நடத்தப்பட்டு வருகிறது.

பொதுஜனங்கள் குடி தண்ணீர் வசதிக்கு Automatic Motor வைத்து வெளியில் தண்ணீர் Pipe மூலம் எடுக்க வசதி அளிக்கப்பட்டிருக்கிறது.

## 16. சமயப்பணி

கார்த்திகைச் சோமவாரங்களிலும், பிர்மோற்சவம் போன்ற திருவிழா நாட்களிலும் ஆதீனப் பிரசாரகர்களைக் கொண்டும் ஏனைய அறிஞர்களைக்கொண்டும் சமய விரிவுரைகள் நிகழ்த்துவிக்கப் பெறுகின்றன. தலத்தைப் பற்றிய தேவாரப் பதிகங்கள், திருப்புகழ்கள் ஆகியவைகளைத் திரட்டிச் சிறுநூலாக வெளியிட்டு அன்பர்கட்கு வழங்கப்படுகின்றது. மாணிக்கவாசகசுவாமிகள் அருளிய கீர்த்தித் திருவகவலும் அங்ஙனமே. திருக்கடவூர் உலா என்னும் இத்தலப் பிரபந்தமும் அச்சிடப்பட்டுள்ளது. ஷை ஆலயத்தின் முக்கிய நூலாக உள்ள அபிராமி அந்தாதி மூலமும், மூலமும் உரையும் சோமவாரம், விபூதி, ருத்ராக்கம், ஐந்தெழுத்து முதலிய நூல்களும் அச்சிடப்பட்டுள்ளது.

சுவாமி சன்னதியில் இலவச தேவார வகுப்பு நடத்தப்பட்டு வருவதுடன் ஆண்டுதோறும் தேவார வகுப்பு ஆண்டுவிழாசெய்து குழந்தைகளுக்கு பரிசுகளும் அளிக்கப்பெற்று வருகின்றன. பொதுஜனங்கள் நலனை உத்தேசித்து Mike கொள்முதல் செய்து கோவிலில் வைத்து காலை மாலை இரண்டு காலங்களிலும் தேவாரம் திருவாசகம் அபிராமி அந்தாதி பாடப்பட்டு வருகிறது.

## 17 நிர்வாகம்

தருமபுர ஆதீனத்தைச்சேர்ந்த தேவஸ்தானங்களில் ஒன்று. திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் 25-வது மகாசந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்** 20—5—45-ல் ஆட்சிபீடத்தை ஏற்ற நாள்முதல் பல திருப்பணிச் சிறப்புக்களை புரிந்து பரிபாலித்து வருகிறார்கள்.

## 18. கல்வெட்டுக்கள்

கோயில் சுற்றுமதில்களிலும், கர்ப்பக் கிருகத்திலும் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவற்றை அரசாங்கக் கல்வெட்டிலாகா அதிகாரிகள் 1906-ம் ஆண்டிலும், 1952-ம் ஆண்டிலும் படி எடுத்திருக்கிறார்கள். அவற்றின் குறிப்புக்கள் மட்டும் வெளிவந்துள்ளன, கல்வெட்டுக்களின் மொத்த எண் 54.

இராசராசன் I லிருந்து இராசராசன் III வரையில் உள்ள சோழமன்னர்கள் ஒன்பதின்மருடைய வரலாற்றுக் குறிப்புக்களும், வள்ளன்மையும், பெரும்பாலான கல்வெட்டுக்களால் அறிவிக்கப்படுகின்றன. பாண்டியர்களுள், சுந்தரபாண்டியன், வீரபாண்டியன், குலசேகர பாண்டியன் ஆகிய மூவருடைய கொடைத்தன்மை பேசப்படுகிறது. விஜயநகர வேந்தருள் கிருஷ்ணதேவ ராயரும், மூக்கண உடையார் பரம்பரையில் விருப்பண



அலுவலகம்

உடையாரும் தேவஸ்தானத் தொடர்புடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

இத்தலம் திரிபுவன சக்ரவர்த்தி இராசராசன் காலத்து, செயங்கொண்ட சோழவளநாட்டு ஆக்கூர் நாட்டுக் கடவூர் என்றும் (245 of 1925), முதற் குலோத் துங்கன் காலத்து இராசநாராயண வளநாட்டு அம்பர் நாட்டுத் திருக்கடவூர் என்றும், பரகேசரி இராஜேந் திரன் காலத்து உய்யக்கொண்டான் வளநாட்டு அம்பர் நாட்டுக் கடவூர் என்றும். (241 of 25) மூன்றாங் குலோத் துங்கன் காலத்துச் செயங்கொண்ட வளநாட்டு ஆக்கூர் நாட்டுப் பிரிவான அம்பர்நாட்டுத் திருக்கடவூர் என்றும் (43 of 1906) குறிக்கப்பட்டுள்ளன. இதனால் வள நாடு, நாடுபற்றிய பிரிவினைகள் அந்தந்தக் காலத்தில், வேறு வேறாக இருந்தமை அறியலாம்.

**மூர்த்திகளின் பெயர்கள் :** திருவீரட்டமுடைய பரமசுவாமி என்றும், காலகால தேவர் என்றும், திருக் கடவூர் நாயகர் என்றும் பெயர்கள் வழங்குகின்றன. திருக்கடவூர், திருவீரட்டநாட்டுப் படையேவிய திருக் கடவூர், உட்படையேவிய திருக்கடவூர், உட்பாதமேவிய திருக்கடவூர் என்று குறிக்கப்பெறுகின்றது. உட்கோயில் களாகக் குலோத்துங்க சோளீச்சரமுடையாரும்: விக்ரம சோளீச்சுரமுடையாரும் குறிக்கப்படுகின்றார்கள். விசய நகர அரசர் காலத்துக் கல்வெட்டுக்களில். காலகால தேவர் கோயிலோடு திருமால் கோயிலும் சேர்த்துக் குறிப்பிடப்படுகின்றது:

**பணி:-** குலோத்துங்க சோழன் தன்னாட்சிக் காலத்து, மண்டபங்களை எடுத்துக்கட்டினான் போலும், அதனைக் 'குலோத்துங்கசோழன் திருவெடுத்துக் கட்டிய மண்டபம்' என்றதால் அறியலாம் (2:7 of 1927)

பெயர் அறியப்படாத கொழும்பு மன்னன் ஒருவனால், காலகால தேவர்மேல் பாடல் ஒன்று செய்யப் பெற்றதாக (50 of 1906) கல்வெட்டு குறிப்பிடுகிறது. பாண்டியநாட்டுப் பெருந்தனக்காரர் ஒருவரால் காலசங்கார மூர்த்திக்குச் சிம்மாசனம் வழங்கப்பட்டது.

இராசராசன் I — கி. பி. *985—1013.*

இவனது *6*-ம் யாண்டு *242*-ம் நாள் திருவீரட்டானமுடையார் கோயில் நிலங்களுக்கும், அதனைச் சுற்றியுள்ள நிலங்களுக்கும் பெருந்தொகையைத் தள்ளுபடி செய்தான், (245 of 1925). 249 of 2195-லும் இச் செய்தியே அறிவிக்கப் பெற்றுள்ளது.

*13*-வது யாண்டில், திருக்கடவூர்ச் சபையார் நிலத்தை வாங்கித் திருவீரட்டமுடைய பரமேசுவரர் கோயிலுக்குச், சில திரு உருவங்களின்முன், ஆண்டு முழுதும் மூன்று விளக்கிடவும், காலைமாலை நாட் பூசைக்குமாக, உதயசந்திரன் அமுதனான மயிலாற்றி என்னும் அவ்வூர் வணிகனிடம், வாரமில்லாது கொடுத்துத் தருமம் இடையீடின்றி நடந்துவர ஏற்பாடு செய்தான்,

14–ம் யாண்டில், திருக்கடவூர் மகாசபையார், கால காலதேவர் கோயில், குலோத்துங்கசோழன் திருவெடுத் துக்கட்டி மண்டபத்தில் சுவாமி கோயில் அணிகளை ஆராய்ந்து வைணவர்களும், மாகேசுரருமாகக் கலந்து விற்ற கிரீடத்தைத் திரும்பவாங்கிச் சேர்த்தது.( (257 of 1925).

அதேயாண்டில், நிலம் அளித்தமை குறிப்பிடப் படுகிறது. இதில் இறைவன், படையேவிய திருக்கடவூர் காலகால தேவர் என்று குறிப்பிடப் பெறுதல் நுனித் தறியத்தக்கது.

15-ம் யாண்டில், திருவீரட்டானத்துப் பெருமான் அடிகளாருக்குப் பணிசெய்யும் பணிப்பெருமக்களுக்கு நிலம் விடப்பெற்றது.

15-ம் யாண்டில், அம்பர் நாட்டுப் படையேவிய திருக்கடவூரில், சில நிலங்களை விற்றசெய்தி குறிப்பிடப் படுகிறது. இந்நாள், 23—9—1000 என்று E. P. Ind Vol. 9. P. 9. கூறுகிறது. (26, 27 of 1906).

**பரகேசரி இராஜேந்திரசோழன்** கி. பி. 1011—1043.

16:ம் யாண்டில், உய்யக்கொண்டான் வளநாட்டுப் படையேவிய திருக்கடவூர் மகாசபையார் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். 24-ம் யாண்டில் உண்டான இக் கல்வெட்டில், தன் ஆட்சி 18ம்- யாண்டில் காலகால தேவர்க்குச் சித்திரைவிழா நடத்தவும், நித்திய பூசைக்கு

நாள்தோறும் நெல்லாக வருஷப்தோறும் அளித்து வரவும், இராசராசன் மூவேந்த வேளான் நிலம்விட்ட செய்தி அறிவிக்கிறது,

**விஜயராஜேந்திரன் கி. பி. 1052.**

36-ம் யாண்டைய நிகழ்ச்சி ஒன்று குறிப்பிடப் படுகிறது. இதில் திருக்கொடியோடு என்று இவன் மெய்க்கீர்த்தி தொடங்குகிறது. சோமக்குடி பிச்சனு தித்தனை விசய ரரஜேந்திரசோழ மூவேந்த வேளாள னுர் இராஜாதிராஜன் சாலையில், 17 மாகேசுரர்களுக்கு உணவுக்கும், காலகால தேவர் பூசைக்குமாக நிலம் விட்டான். அந்நிலம், சாகுபடி செய்வதற்கு வரும் வரையில் குடிகள் அனுபவித்துக் கொள்வது என்றும், அதன் பிறகு சாலா போகத்திற்கு எடுத்துக் கொள்வ தென்றும், குறிப்பிட்டான் (244 of 25)

**இராஜாதிராஜன் கி, பி. 1018,**

இவன் இராசகேசரி வர்மனை திருபுவன சக்ர வர்த்தி, மதுரையும் ஈழமுங்கொண்ட இராஜாதிராஜன் என்று வழங்கப்படுகிறுன். இவனுடைய மெய்க்கீர்த்தி கடல்சூழ்ந்த என்று தொடங்குகிறது. ஆக்கூர்நாட்டுப் பிரிவான அம்பர்நாட்டு மகா சபையாராகிய, 240 பேரிளமையர், (Assembly of Elders) நிலங்களி லிருந்து வரி வசூலித்தும், யாருக்கும் சொந்தமில்லாத நிலங்களை விற்றும், கோயிலுக்கு உரிமையாக்கின விவரம் தரப்பெற்றுள்ளது. மேற்படி யாண்டு 180-வது

நாள் 240 வேளாளர்கள், அரசர் நினைவாக காலகால தேவர்க்குக் காணிக்கை அளித்தார்கள். (253, 256, of 1925).

நடுவில் நாடான இராசராச வளநாட்டு ஏமப் பேறூர்நாட்டு. ஏமப்பேறூரான் ஒருவனால் விளக்கும் இடையீடின்றி விளக்கெரிக்க நெடும்புறநாட்டில் நிலமும் அளிக்கப்பட்டன. உய்யக்கொண்டான் வளநாட்டு, பாம்புணி நாட்டு நடாறுடையான் ஒருவனால் ஒரு விளக்கும் அளிக்கப்பெற்றது, (35 of 1961) பாண்டியகுலாசனி வளநாட்டுப் பூதலூர்| நாட்டுப் பூதலூருடையான் ஒருவனால் விளக்குக்கு நிலம் அளிக்கப்பட்டது.

**வீரராசேந்திரன்** கி. பி. 1062.

2.வது யாண்டில், செயங்கொண்ட சோழவளநாட்டு திருக்கடவூருடையார் காலகால தேவர்க்கு விளக்குக்கு நிலம்விட்டான். (34, of 1906.)

**குலோத்துங்கன் I** கி. பி. 1070—1120.

இவன் இராஜகேசரிவர்மனான திரிபுவனச் சக்ர வர்த்திகள் குலோத்துங்க சோழன் என்றே குறிப்பிடப் பெறுகிறான். இவனது 18, 19 of 1906 என்ற கல் வெட்டுக்கள் சிதைந்தமையால் முழுதும் அறியப்பட வில்லை. ஆயினும் விளக்குக்கு நிபந்தம் அளித்ததாகக் குறிப்பிடப்படுகிறது. 26-ம் யாண்டில் இராச நாரா

யணன் வளநாட்டு அமரர்நாட்டு, உட்படையேவிய திருக் கடவூர் மகாசபையார் செய்துகொண்ட ஒப்பந்தம் குறிப் பிடப்பட்டுள்ளது.

27-ம் யாண்டில், (தனுர்மீ 16வ அஷ்டமிதிதி) $1\frac{3}{4}$ வேலி நிலத்தை விற்று, 50 ஆண்டிற்கு, ஒரு கட மையும் பெருதபடி, சட்டமலே வளநாட்டு, பாம்புணிக் கூற்றத்து கொற்றமங்கலத்து வாணவராயர், அரசனுக்கு நன்றுண்டாக மார்க்கண்டேய மடத்தில் வேதாத்யயனம் செய்த 10 சிவயோகியர்களுக்குத் திருவமுதளிக்க மடப் புறமாக திருக்கடவூர் மகாசயைாருக்களித்தார். இச் சபையின் கூட்டம், கோயிலுக்குள்ளேயுள்ள திருச்சிற் றம்பல வேலேக்காரன் திருமண்டபத்தில் கூடியது. இப்போது திருக்கடவூர்ப் பக்கமுள்ள மணல்மேட்டில். மார்க்கண்டேயர் கோயில் ஒன்று இருக்கிறது மார்க்கண் டேய மடத்திற்கும் இதற்கும் தொடர்புண்டா என்பது ஆராயத்தக்கது. (243 of 19.5)

44-ம் யாண்டில், காலகாலதேவர்க்கு விளக்கிற்கும், விளக்குத் தண்டிற்குமாக நிலம் அளித்தான். 48-ம் யாண்டுக் கல்வெட்டு சிதைந்தது,

**விக்கிரமசோழன்** கி. பி. 1118—1135.

இவனுட்சி 2-ம் யாண்டில் திருக்கோயிலுக்கு நிலமளித்தான். இச்செய்தி விளக்கமாகக் கிடைக்காத வண்ணம் சிதைந்திருக்கிறது. நான்காம்யாண்டில், ராஜ நாராயண வளநாட்டுக் குறும்பர் நாட்டுத் தில்லேயாளி

நல்லூரில் திருக்கடவூர் நாயனரின் அர்ச்சனபோகமாக நிலமளித்து, அதனைத் திருக்கடவூர்மகாசபையார் அம்பர் நாட்டுத் திருக்கடவூரில் கல்வெட்டுவித்துக்கொள்ள உத்தரவிட்டான். அதில் அருளாகரன் வாய்க்கால் குறிப்பிடப்பெறுகின்றது. (250 of 1925) 6-ம் யாண்டில் கண்ட கல்வெட்டு முற்றுப்பெற்றது. 7-ம் யாண்டில் விளக்குக்குப் பொன் அளித்தது குறிப்பிடப்பெறுகிறது.

## குலோத்துங்கன் III — கி. பி. 1186—1216.

பரகேசரிவர்மனை திரிபுவன குலோத்துங்கன் என்று குறிப்பிடப்படுகிறான். இவனுடைய 9-ம் ஆட்சி யாண்டில் விருதராசபயங்கர வளநாட்டு நல்லூர்நாட்டு மூலங்குடியான் ஒருவனல், காலகாலதேவர் திருமுன் விளக்குக்காக நிலம்விடப்பட்டது (37 of 1906). இராச ராசவளநாட்டு கீழ்வேங்கைநாட்டுப் பெருநல்லூருடை யான் ஒருவனல், எருக்காட்டுச்சேரி மணற்குன்றில் நிலம் விடப்பெற்றது.

15-ம் யாண்டுக் கல்வெட்டில், மதுரையும் பாண் டியன் முடித்தலையும் கொண்ட என்று சிறப்பிக்கப் படுகிறான். மெய்க்கீர்த்தி "புயல் வாய்த்து" என்று தொடங்குகிறது. மெர்கன் நாயகன் திருநடனம் புரிஞ் சான் என்பவனல் ஊர்ப்பொதுவான நிலங்களைப் பூந் தோட்டப் பாதுகாப்பிற்காகத், தோட்டக்காரர்களுக்கு அளித்து இறையிலி ஆக்கப்பெற்றது. 16-ம் யாண்டில், அரையன் இராசராசதேவனன வாணதிராயனல் கால

காலர் கோயிலில் இராஜராஜேசுவரர் படிமத்தை எழுந் தருளுவித்து நிலம் வழங்கப்பெற்றது. 17-ம் யாண்டில், திருவீரட்டானமுடையார் கோயிலில் உள்ள குலோத் துங்க சோளீச்சுரமுடையார், விக்கிரமசோளீச்சுரமுடை யார், கூத்தாடும் காலதேவராகிய காலகாலதேவர் இவர் களுக்குப் பூசைவழிபாட்டிற்காகப் பரம்பரையாக இருந்த சைவாசாரியர்களை விலக்கிவிட்டுப் புதிதாக இரண்டு பேரை வைத்துத் திருக்கோயில் பூசைமுறைகளையும் மாற்றினர். மாற்றியவர் சுவாமிதேவர் என்பவர் (40 of 1906). 23-ம் யாண்டு 283-ம் நாளில் அரசகவியாகிய வீராந்தப்பல்லவராயருடைய பிரீதிக்காகப் பாரசைவன் பொன்னனுகிய காலவிநோதநிருத்தப்பிரியனை நிருத்த நிலைக்காக நியமித்து நெல் சம்பளம் வழங்க ஏற்பாடு செய்தான். இந்த நிகழ்ச்சி சிதம்பரம் கல்வெட்டிலும் குறிக்கப்பெற்றுள்ளது.

## திரிபுவனச்சக்ரவர்த்தி இராசராசன் III கி. பி. 1216—1246.

5-வது யாண்டில் செயங்கொண்ட சோழவளநாட்டு ஆக்கூர்நாட்டுத் திருக்கடவூருடையார் காலகாலதேவர்க்கு நிலம் அளித்தான் (31 of 1906). 18-ம் யாண்டில் மேல்வளநாட்டுப் பழையனூரானுன வேதவனமுடைய அம்மையப்பரால் நிலம் அளிக்கப்பெற்றது (32 of 1906). பெரியதேவரான மூன்றுங்குலோத்துங்கதேவரால் ஆட்சி 13-ம் யாண்டில் அளிக்கப்பட்ட நிபந்தங்களை இவனாட்சி 21-ம் யாண்டில் குறிப்பிடுகிறூர். இது பழங்கதையா யினும் நமக்கொரு பெரும்பயன் விளைவிக்கிறது. இந்த ராசராசனை மூன்றுமவனுகத்துணியத் துணைசெய்கிறது.

## கோநேரின்மைகொண்டான்

இப்பெயர், இரு அரசர்களுக்கு வழங்கியதென்று முன்னரே குறிக்கப்பெற்றது. இவன் ஆட்சி 12-ம் யாண்டு 272-ம் நாள் ஆக்கூரான ராஜேந்திர சதுர்வேதி மங்கலத்துக் குலோத்துங்கசோழன் கருப்பூரில் காளிங்க ராயன் வேண்டுகோட்படி 31 வேலி நிலத்தை ஒதுக்கிக் கொடுத்து, குலசேகரன் சந்தி என்னும் நாள் வழிபாடும் தான் பிறந்தநாளாகிய ஆனிமூலத்தில் சிறப்புவழிபாடும் நடக்க ஏற்பாடுசெய்தான் (247 of 1945). 18-ம் யாண்டு 285-ம் நாள் மூவரையன் வேண்டுகோட்காக அரசனுக்கு நன்றுண்டாகக் கோயிலுக்குத் தென்பால் நந்தவனப்புறமாக நிலம் வழங்கப்பெற்றது. நுந்தா விளக்குக்காக எருக்காட்டஞ்சேரி கிராமத்தையும் பாய்ச் சல்வசதி முழுதும் செய்து அளித்தான். கோயில் நகைப் பாதுகாப்பிற்காகக் காவிரிப்பூம்பட்டினத்தில் கட்டிடம் ஒன்று கட்டிக்கொடுத்தான் (251 of 1025).

## சுந்தரபாண்டியதேவன்

பெருமாள் சுந்தரபாண்டியதேவன் என்று குறிப் பிடப்படுகின்றான். இவனுடைய எழுத்து சிதைந்து விட்டது (51 of 1906).

## ஜடாவர்மன் வீரபாண்டியன்

இவனது ஆட்சி 34-ம் யாண்டில் நிலம் விட்டான். இவன் முன்னோனது 41-ம் யாண்டின் நிகழ்ச்சியும் இதில் குறிப்பிடப்படுகிறது (45 of 1906).

**மாறவர்மன் குலசேகரபாண்டியன்** கி. பி. 1308.

உலகுடைய பெருமானின் நன்மைக்காகக் காலகால தேவர் சந்நிதியில் 40 விளக்குகள் இட நிலம் விட்டான். இந்தக்காலத்தில் இவன் சகோதரர்களாலேயே நாட்டில் குழப்பமிருந்தது என்று இதில் குறிப்பிடப்படுகிறது. (46 of 1906).

**விருப்பண உடையார்**

சகம் 1307-ல் செயங்கொண்ட சோழவளநாட்டுக் கீழ்ப்பாக்கத்துப் பிரமதேயமான திருக்கடவூர் காலகால தேவர் கோயிலுக்கு 100 வேலி நிலத்தை எல்லாவகையான வரிகளையும் நீக்கித் தேவதானமாக அளித்தான். இவன் அரியப்ப உடையாருடைய மகன் என்று குறிப்பிடப்படுகின்றான்.

**கிருஷ்ணதேவராயர்**

இவர் விசயநகர அரசர். இவர்காலத்து, திருக்கடவூர் ஆபத்சகாயன் என்ற அந்தணனால் கோயில் பழுதுபார்க்கப்பெற்றது. இவ்வந்தணன் ரேச்சூரில் நடந்த போரில் பெரும்பங்கு எடுத்துக்கொண்டான் (47 of 1906). சகம் 1443-ல் (கி. பி. 1521). திருக்கடவூர் ஆதித்தபட்டர், கரியமாணிக்கபட்டர், புக்கதுறைவல்ல சோழபிரமராயர் இவர்கள் விசயநகரம் சென்று, அரசனைக்கண்டு, சோதிசூலம் ஆகிய இவற்றைக் காட்டிக் கோயிலில் தங்களுக்குச் சில சலுகைகளைப் பெற்றுக்கொண்டார்கள். அரசன் 8 வேலி கோயிலுக்காக அளித்தான் (24 of 1925).

திருக்கடவூரிலுள்ள சிவ விஷ்ணு கோயிலுக்குச் சுமார் *10000* பொன்வரை வஜாசெய்ய உத்தரவளித்தான் (*251* of *1925*).

## கொழும்பரசன்

திருக்கடவூர் கோயிலைக் கட்டினன். இவன் கால கால தேவரைப்பற்றி ஒரு பாடல் இயற்றி இருக்கிறுன். அந்தப்பாடல் மூன்றுங் கோபுரத்தில் இருக்கின்றது.

# திருப்பாடல்கள்

## பண்-காந்தாரபஞ்சமம்

### திருச்சிற்றம்பலம்

சடையுடை யானுநெய் யாடலா னுஞ்சரி கோவண
உடையுடை யானுமையார்ந்தவொண் கண்ணுமைகேள்வனும்
கடையுடை நன்னெடு மாடமோங் குங்கட வூர்தனுள்
விடையுடை யண்ணலும் வீரட்டா னத்தர னல்லனே.

எரிதரு வார்சடை யானும்வெள் ளையெரு தேறியும்
புரிதரு மாமலர்க் கொன்றைமா லைபுனை ந் தேத்தவே
கரிதரு காலனைச் சாடின னுங்கட வூர்தனுள்
விரிதரு தொல்புகழ் வீரட்டா னத்தர னல்லனே.

சுடர்மணிச் சுண்ணவெண் ணீற்றின னுஞ்சுழல் வாயதோர்
பட்மணி நாகம ரைக்கசைத் தபர மேட்டியும்
கடமணி மாவுரித் தோலின னுங்கட வூர்தனுள்
விடமணி கண்டனும் வீரட்டா னத்தர னல்லனே.

வரைகுடை யாமழை தாங்கின னும்வளர் போதின்கண்
புரைகடிந் தோங்கிய நான்முகத் தான்புரிந் தேத்தவே
கரைகடல் சூழ்வையங் காக்கின்ற னுங்கட வூர்தனுள்
விரைகமழ் பூம்பொழில் வீரட்டா னத்தர னல்லனே.

வெந்தவெண் ணீறணி வீரட்டா னத்துறை வேந்தனை
அந்தணர் தங்கடவூருளா னையணி காழியான்
சந்தமெல் லாமடிச் சாத்தவல் லமறை ஞானசம்
பந்தன செந்தமிழ் பாடியா டக்கெடும் பாவமே.

திருச்சிற்றம்பலம்

—திருஞானசம்பந்த சுவாமிகள்.

## திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

பொள்ளத்த காயமாயப் பொருளினைப் போகமாதர்
வெள்ளத்தைக் கழிக்கவேண்டில் விரும்புமின் விளக்குத்தூபம்
உள்ளத்த திரியொன்றேற்றி யுணருமா றுணரவல்லார்
கள்ளத்தைக் கழிப்பர்போலுங் கடவூர்வீ ரட்டனாரே.

பெரும்புலர் காலைமூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள்கொண்டாங்கார்வத்தையுள்ளேவைத்து
விரும்பிநல் விளக்குத்தூபம் விதியினா லிடவல்லார்க்குக்
கரும்பினிற் கட்டிபோல்வார் கடவூர்வீ ரட்டனாரே.

பொருத்திய குரம்பைதன்னுட் பொய்ந்நடை செலுத்துகின்றீர்
ஒருத்தனை யுணரமாட்டீ ருள்ளத்திற் கொடுமைநீக்கீர்
வருத்தின களிறுதன்னை வருத்துமா வருத்தவல்லார்
கருத்தினி லிருப்பர்போலுங் கடவூர்வீ ரட்டனாரே.

பழியுடை யாக்கைதன்னிற் பாழுக்கே நீரிறைத்து
வழியிடை வாழமாட்டேன் மாயமுந் தெளியகில்லேன்
அழிவுடைத் தாயவாழ்க்கை யைவரா லலைக்கப்பட்டுக்
கழியிடைத் தோணிபோன்றேன் கடவூர்வீ ரட்டனீரே.

மாயத்தை யறியமாட்டேன் மையல்கொண் மனத்தனாகிப்
பேயொத்துக் கூகையானேன் பிஞ்ஞகா பிறப்பொன்றில்லீ
நேயத்தா னினையமாட்டே னீதனே நீசனேனுன்
காயத்தைக் கழிக்கமாட்டேன் கடவூர்வீ ரட்டனீரே.

சேலினே ரனையகண்ணார் திறம்விட்டுச் சிவனுக்கன்பாய்ப்
பாலுநற் றயிர்நெய்யோடு பலபல வாட்டியென்றும்
மாலினைத் தவிரநின்ற மார்க்கண்டற் காகவன்று
காலனை யுதைப்பர்போலுங் கடவூர்வீ ரட்டனாரே.

முந்துரு விருவரோடு மூவரு மாயினாரும்
இந்திர னோடுதேவ ரிருடிக ளின்பஞ்செய்ய
வந்திரு பதுகடோளா லெடுத்தவன் வலியைவாட்டிக்
கந்திரு வங்கள்கேட்டார் கடவூர்வீ ரட்டனாரே.

திருச்சிற்றம்பலம்

## திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

மருட்டுயர் தீரவன் றர்ச்சித்த மாணிமார்க் கண்டேயற்காய்
இருட்டிய மேனி வளைவா ளெயிற்றெரி போலுங்குஞ்சிச்
சுருட்டிய நாவில்வெங் கூற்றம் பதைப்ப வுதைத்துங்ஙனே
உருட்டிய சேவடி யான்கட வூருறை யுத்தமனே.

பாலனுக் காயன்று பாற்கட லீந்து பணித்தெழுந்த
ஆலினிற் கீழிருந் தாரண மோதி யருமுனிக்காய்ச்
சூலமும் பாசமுங் கொண்டு தொடர்ந்தடர்ந் தோடிவந்த
காலனைக் காய்ந்தபி ரான்கட வூருறை யுத்தமனே.

தேன்றிகழ் கொன்றையுங் கூவிள மாலை திருமுடிமேல்
ஆன்றிக ழைந்துகந் தாடும்பி ரான்மலை யார்த்தெடுத்த
கூன்றிகழ் வாளரக் கன்முடி பத்துங் குலைந்துவிழ
ஊன்றிய சேவடி யான்கட வூருறை யுத்தமனே.

திருச்சிற்றம்பலம்

## திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

மலைக்கொ ளானை மயக்கிய வல்வினை
நிலைக்கொ ளானை நினைப்புறு நெஞ்சமே
கொலைக்கை யானையுங் கொன்றிடு மாதலால்
கலைக்கை யானைகண் டீர்கட வூரரே.

சினக்குஞ் செம்பவ ளத்திர ளானையார்
மனக்கும் வல்வினை தீர்த்திடு மானையார்
அனைக்கு மன்புடை யார்மனத் தானையார்
கனைக்கு மானைகண் டீர்கட வூரரே.

அடுத்து வந்த விலங்கையர் மன்னனை
எடுத்த தோள்க ளிறநெரித் தானையார்
கடுத்த காலனைக் காய்ந்ததொ ரானையார்
கடுக்கை யானைகண் டீர்கட வூரரே.

திருச்சிற்றம்பலம்

—திருநாவுக்கரசு சுவாமிகள்.

## பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்

பொடியார் மேனியனே புரிநூலொரு பாற்பொருந்த
வடியார் மூவிலைவேல் வளர்கங்கையின் மங்கையொடும்
கடியார் கொன்றையனே கடவூர்தனுள் வீரட்டத்தெம்
அடிகே ளென்னமுதே யெனக்கார்துணை நீயலதே.

அன்று வின்னிழற்கீ ழறநால்வர்க் கருள்புரிந்து
கொன்றாய் காலனுயிர் கொடுத்தாய்மறை யோனுக்குமான்
கன்று ருங்கரவா கடவூர்திரு வீரட்டத்துள்
என்று தைபெருமா னெனக்கார்துணை நீயலதே.

காரா ரும்பொழில்சூழ் கடவூர்த்திரு வீரட்டத்துள்
ஏரா ரும்மிறையைத் துணையாவெழி லவலர்கோன்
ஆரூ ரன்னடியா னடித்தொண்ட னுரைத்ததமிழ்
பாரோ ரேத்தவல்லார் பரலோகத் திருப்பாரே.

திருச்சிற்றம்பலம்

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்

வாய்ந்தநீர் வளத்தால் ஓங்கி மன்னிய பொன்னி நாட்டின்
எய்ந்தசீர் மறையோர் வாழும் எயிற்பதி எறிநீர்க் கங்கை
தோய்ந்தநீள் சடையார் பண்டு தொண்டர்மேல் வந்த
காய்ந்தசே வடியார் நீடி இருப்பது கடவூ ராகும். [கூற்றைக்

வயலெலாம் விளைசெஞ் சாலி வரம்பெலாம் வளையின்முத்தம்
அயலெலாம் வேள்விச் சாலை அணையெலாங் கழுநீர்க் கற்றை
புயலெலாங் கமுகின் காட்பு புறமெலா மதன்சீர் போற்றல்
செயலெலாந் தொழில்கள் ஆறேசெழுந்திருக்கடவூரென்றும்.

திருச்சிற்றம்பலம்

—சேக்கிழார்.

எட்டின்வீ திப்படி யேகொடு மாபுர
வீட்டில டைத்திசை வேகசை மூணதி
லேற்றிய டித்திட வேகட லோடம தெனவேகி

ஏற்குமெ னப்பொரு ளாசைபெ ணாசைகொள்
நாய்க்குநி கர்த்திரி யாபரி யாதவ
மேற்றியி ருப்பிட மேயறி யாமலும் உடல்பேணிப்

பூட்டுச ரப்பணி யேமத னமென
ஆட்டிய சைத்திய லேதிரி நாளையில்
பூத்தம வக்குகை யோபொதி சோறென கழுகாகம்

போற்றிந மக்கிரை யாமென வேகொள
நாட்டிலொ டுக்கென வேவிழு போதினில்
சூட்டுப ணிப்பத மாமயி லூர்வருள் [illegible]வாயே

வீட்டில டைத்தெரி யேயிடு பாதக
    ஞட்டைவி டுத்திட வேபல சூதினில்
    வீழ்த்தவி திப்படி யேகுருகாவலர் வனமேபோய்

வேற்றுமை யுற்றுரு வோடியல் நாளது
    பார்த்தமு டித்திட வேயொரு பாரத
    மேற்புனை வித்தம காவிர மாயவன் மருகோனே

கோட்டைய ழித்தசு ரர்பதி கோவென
    மூட்டியெ ரித்தப ராபர சேகர
    கோட்டுமு கைக்கதி பாகட வூருறை பெருமாளே.

—அருணகிரிநாதர்.

சக்கிரவா ளத்தையரை நொடியில்வலம் வந்தனன்
    சலராசி யேழுமேக
சமுத்திரம தாக்கினன் விரலினல் வேள்விவரு
    தகரைப் பிடித்தேறினன்
பக்கமுறு சேடனைச் சாட்டையென மேருகிரி
    பம்பரம தாயாட்டினன்
பானுவின் தேரிலுனை வைத்துனது தேரின்மேற்
    பானுவை எடுத்துவைத்தான்

திக்கெட்டும் வாழ்கிரி பிடித்தொன்றி னேடொன்று
    சினமாக முட்டவிட்டான்
சேயுன்னை விளையாட வேயழைத் தானிவன்
    திருமுன்வா ராதிருந்தால்
அக்கணங் கோபம்வைப் பானெங்கள் குமரனே
    டம்புலீ யாடவாவே
அருள்கால காலனுறை கடவூரில் வேலனுடன்
    அம்புலீ யாடவாவே

—சிதம்பர முனிவர்.



நந்தவனம்



அம்பாள்கோயிலின் உள்தோற்றம்

கறுவிவீழ் காலன் மார்பிற் சேவடிக் கமலஞ் சாத்திச்
சிறுவனுக் காயுளீந்த சேவகப் பெருமான் மேய
அறைபுனற் பழன மூதூர் .... .... ....

—பரஞ்சோதியார்.

உதிக்கின்ற செங்கதி ருச்சித் திலக முணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி யபிராமி யென்றன் விழுத்துணையே.

தவளே யிவளெங்கள் சங்கர ஞர்மனை மங்கலமாம்
அவளே யிவர்தமக் கன்னையு மாயின ளாகையினல்
இவளே கடவுளர் யாவர்க்கு மேலை யிறைவியுமாம்
துவளே னினியொரு தெய்வமுண் டாகமெய்த்
தொண்டுசெய்தே.

விரவும் புதுமல ரிட்டுநின் பாத விரைக்கமலம்
இரவும் பகலு மிறைஞ்சவல் லாரிமை யோரெவரும்
பரவும் பதமு மயிரா வதமும் பகீரதியும்
உரவுங் குலிசமுங் கற்பகக் காவு முடையவரே.

சிறக்குங் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கந் தருநின் றுணைவரு நீயுந் துரியமற்ற
உறக்கந் தரவந் துடம்போ டுயிருற வற்றறிவு
மறக்கும் பொழுதென்முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே.

—அபிராமிபட்டர்.

மார்க்கண்டன் வில்வ வனமகிமை யைக்கேட்டுக்
கார்க்கண்டந் தீரக் கனிவினுல்-யார்க்கும்
குறையகற்றக் கீழ்த்திசையிற் கூபமுண் டாக்கிச்
செறியும் நிருதி திசையில்-வெறிகமழும்
பிச்சிநறும் போதாற் பெரிதுவந்து பூசிப்ப
மெச்சிய வன்பால் மிகுந்தகற்றி-யச்சிகரம்
போன்ற மறலி புரள முனிந்தடியா
லூன்றி யருந்தவனை யுய்வித்து-மாண்டு
பிறவாது நித்தியமாம் பேறு முதவி
யிறவாத வின்பத்தை யீந்தோன்-தறுகட்
சமன்மாளப் பூமான் றளர்ந்து பொறையாற்
கமலா சனத்திறையோன் கண்ணுற்-றிமையோர்
பெருமானே யாற்றேன் பெரும்பார மென்னத்
திருமால்பா லாங்கவனுஞ் சென்று-பரிவா
லிதனை யுரைப்ப விரங்கி யவனுங்
கதமொழியுங் கா[illegible] கருதித்-துதிசெய்து
பின்ன ரியம்பப் பெரிய கரும்பகட்டின்
மன்னவ னுய்ய வரமுதவி-யின்னுஞ்
சிவசின்னம் பெற்றுரைத் தீண்டாதே தீண்டி
லவசின்ன முன்போ லடை[illegible]-தவிரென்று
ஞால முழுதும் நடுங்க வுயிருண்ணுங்
காலனுக்கு மே[illegible] கழறினேன்.

—சுப்பிரமணியக் கவிராஜ [illegible]ர்த்திகள்.

023-3 211931K
NS4
113555

8B
4-122

# இந்த தேவஸ்தானத்தில் கிடைக்கும் இதர புஸ்தகங்கள்

| | | ரூ. | அ | பை. |
|---|---|---|---|---|
| 1. திருவாசகம் (விருத்தியுரையுடன்) (காலிகோ பைண்டு) | — | 2 | 0 | 0 |
| 2. அபிராமி அந்தாதி (விருத்தியுரையுடன்) | — | 0 | 6 | 0 |
| 3. அபிராமி அந்தாதி (மூலம் மட்டும்) | — | 0 | 1 | 0 |
| 4. திருநீறு | — | 0 | 0 | 6 |
| 5. உருத்திராக்கம் | — | 0 | 0 | 6 |
| 6. ஐந்தெழுத்து | — | 0 | 0 | 6 |
| 7. சோமவாரம் | — | 0 | 0 | 6 |